# மதங்களின் இயங்கியலும் அறவியல் நெறியும்

*பெ. ஷைனி*
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை
வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காயல்பட்டணம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6453

***ஆய்வு சுருக்கம்***

இறை உணர்வு இல்லையேல் மனிதம் இல்லை. பெரும்பான்மையான மனிதர்களின் அன்றாட பழக்க வழக்கங்களில் வழிபாடும் இணைந்தே இருக்கின்றன. இறைபக்தி என்பது வெறும் பெயரளவில் வழிபாட்டோடு நின்றுவிடவில்லை. அவை அறிவுரை புகட்டியும் நல்வழிப்படுத்தியும் ஆளுகை செய்தும் தன்னோடு ஒன்றிணைய செய்கிறது. மதங்களின் போதனையும் தத்துவங்களும் சித்தாந்தங்களும் ஒன்றே. அவை மக்களை நல்வழிப்படுத்தலை நோக்கமாக உடையது. மதத்தின் இயங்கியல் கொள்கையானது அறத்தின் பாற்பட்டதாகும். அவ்வறமானது ஒன்றுடன் ஒன்று தொடர்புத்தன்மையுடையதாக ஒத்தத் தன்மையுடையதாய் மதங்களிடையே திகழ்கிறது. அத்தகு அறநெறிகளை உணர்த்தும் தன்மையில் மதங்களின் ஒருங்கமைவை ஆராய்வது, அவை எங்கனம் அறத்தில் பொருந்தியிருக்கிறது என்பதை ஆராய்வது இக்கட்டுரையாகும்.

## முன்னுரை

மக்களை நெறிப்படுத்துதலில் சமயங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. மதங்கள் இயங்குவதற்கு அவற்றின் கொள்கைகளே அடிநாதமாய் திகழ்கிறது. மதக் கொள்கைகளை அடியொற்றியே அறநெறியும் வலியுறுத்தப்படுகிறது. இலக்கியங்கள் உணர்த்தும் மதக் கொள்கை களையும் அவற்றின் மூலம் அறிவுறுத்தப்படும் அறக் கொள்கைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

## மதத்தின் தோற்றம்

மனித இனம் தோன்றிய காலக்கட்டத்தில் இயற்கை தன்மையை உணராத மனிதன் இயற்கை பேரிடரைக் கண்டு அஞ்சியதன் விளைவாகவும் நோய்கள் முதலியவற்றிற்கு ஆட்படும் போதும் அதன் தன்மை இதுவென உணராத் தன்மையில் வழிபாடு தோன்றியதெனக் கூறலாம். வாழ்க்கையில் வரும் பிரச்சனைகள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் வரும்போது அதை ஆற்றுவிக்க நாமே தேவைக்காக உருவாக்கிதே மதங்கள். சிக்கல்கள் தொடரும் கூட்டமாக வாழும் மக்களிடையேதான் மதங்கள் மக்களின் தேவைக்காக

உருவாகின்றன, கடைபிடிக்கபடுகின்றன (தமிழ் சமூகவியல் ஒரு கருத்தாடல், ப.எ 59) என்ற கருத்து சிந்திக்க தக்கது. இயற்கையை துணையாகக் கொள்ளுதற்கு வழிபட அது மதமாய் உருப்பெற்றதாய் கொள்ளலாம். மனிதனின் ஒவ்வொரு செயலிலும் அவனது நன்மைத் தனத்திலும் தீங்கிலும் ஆத்மாத்தமாய் தானே ஒரு உடனிருப்பை உருவாக்கியதே மதங்களும் வழிபாடுகளுமாகும். நன்மைக்கு நன்றியாகவும் தீமையிலிருந்து தப்புவிக்க வேண்டுமென எண்ணபூர்வமாய் தோன்ற வழிபாடு தோன்றியதெனக் கொள்ளலாம்.

இறைவன் உருவான விதமும் அறநோக்கும்

அறமானது தவறும் போது தீமை நிகழும் போது நம்மை விட மேலான ஓர்சக்தி இருந்து அதை தடுப்பதாக மக்களின் நம்பிக்கையில் பிறந்ததே தெய்வம். உலகில் தர்ம நெறிகள் மறைந்து அதர்மம் மேலோங்கும் போதெல்லாம் இறைவன் அதை அழித்து மீண்டும் தர்மம் தழைக்கச் செய்கிறான் (இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் ஒருமைப்பாடு, ப.எ 1) என்ற கூற்றிலிருந்து இறைவன் என்பவன் அநீதியை அழித்து அறத்தை நிலைநிறுத்துபவன் என்பதை அறிய முடிகிறது. எல்லா மதங்களிலும் இக்கருத்து இருப்பதை பரவலாக பார்க்க முடிகிறது.

***தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்***
***(திருவிவிலியம்,மத்தேயு 1:21)***

அச்சமூட்டி எச்சாணீக்கை செய்யும் தூதர் வராத எந்த வகுப்பாரும் இருக்கவில்லை (குர்ஆன் 35:24) என்பதன் மூலம் மனிதன் குற்றம் குறைகளை நீக்கி அறத்தை நிலை பெறச் செய்யக்கூடியவர் என்பதை அறியலாம்

## இறைவன் ஒருவரே

மதங்கள் எப்போதும் தத்தம் கருத்துகளில் சமூக முரணை எடுத்துரைப்பதில்லை. மனிதர்களாகிய நாம் தான் முரணை உருவாக்குகிறோம். இறை நூல்கள் அனைத்தும் மனிதர்களால் உருவாக்கப்பட்டிருப்பினும் அம்மனித நோக்கப் பண்பு என்பது அறச் செயல்களாகவே இருக்கக்கூடும். சமய நூல்களில் இறைவன் ஒருவரே என்ற நெறி கூறப்படுவதை அறியலாம். சிவம் ஒன்றே, பிதாவாகிய தேவன் ஒருவரே, அல்லாஹ் ஒருவனே என அவரவர் தாம் கொண்ட மதத்தை ஒருமைத் தன்மையால் குறிப்பதை காண முடிகிறது. அவ்வாறு கூறுவதை மதப்பிரிவினையாக அடையாளப்படத்துதல் கூடாது. மாறாக கடவுள் தன்மை என்பத ஒன்று என உணர்தலே நலமாகும். இதனையே திருமூலர்

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
***(திருமந்திரம் -2104)***

என்று குறிப்பிடுகிறார். இந்த உலகமானது தெய்வத்தின் தன்மையாலே இயங்குகிறது. இறைவனே அனைத்திற்கும் முதன்மையானவன் என்பதை

***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு (திருக்குறள் -1)***

என்று கூறுகிறது குறள்.

## மதங்களின் நோக்கம்

உலகில் உள்ள அனைத்து மதங்களின் நோக்கம் மனிதனை மனிதத் தன்மையோடு உருவாக்கல் ஆகும். மனிதனை பக்குவபடுத்தலே மதமாகும். பிறருக்கு தீங்கு செய்தல் கூடாது. உயிர்கொலை செய்தல் கூடாது.பொய் கூற கூடாது. இரக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும் ஆகிய அறக் கொள்கைகள் எல்லா மதத்திற்கும் பொதுவானவையாக உள்ளன. நாம் செய்யும் நன்மையான செயல்கள் அனைத்தும் இம்மையிலும் மறுமையிலும் உதவி செய்யும் என்பது மதங்களின் பொதுக் கருத்தாகும்

## இந்துத்துவ அற போதனை

இந்து சமயமானது சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சாக்தம், சௌமாரம் ஆகிய ஆறு பிரிவினைக் கொண்டது. ஆயினும் இந்துவத்தை பொறுத்தவரை சைவமும் வைணவமும் மட்டுமே ஆதிக்கம் பெற்றவையாக திகழ்கிறது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் மையப்

பொருண்மையாக திகழ்கின்றன. வேதங்களும் உபநிடதங்களும் தனிமனித பக்தியை அறத்தோடு நெறிப்படுத்துகிறது. செய்ய வேண்டியவற்றையும் செய்யக் கூடாதவற்றையும் காரண காரியத்தோடு கற்பிக்கிறது. இறைவன் அனைத்திலும் இருக்கக் கூடியவன். முக்கியமாக இறைவனை அன்பின்வழி அடையச் சொல்லுகிறது.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது அறிகிலார்**
**(திருமந்திரம் -)**

என்ற பாடல் மூலம் கடவுள் வெளியில் இல்லை பிறரன்பில் இருக்கிறான் என்பதை அறிய முடிகிறது. மேலும் ஞான சிந்தனையால் முத்தியை அடைய முடியும் என்பதை

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில் இல்லை**
**( திருமந்திரம் - 1467)**

என்ற பாடல்வழி அறிய முடிகிறது.

### சமணத்தின் அறக் கொள்கைகள்

சமண சமயமானது மகாவீரரால் உருவாக்கபடபட்டது. சமணத்தின் முக்கிய மத வலியுறுத்தல் திரிரத்தினங்கள் என்பதும் பஞ்சமஹாத்ரா என்பதும் ஆகும். திடணீரத் தினங்கள் என்பவை

1. நல்ல நம்பிக்கை
2. நல்லறிவு
3. நல்ல நடத்தை

என்பதாகும். மேலும் பஞ்சமஹாத்ரா என்பது

1. அஹிம்சை
2. சத்தியம்
3. திருடாமை
4. தியாகம்
5. பிரம்மச்சரியம்

என்பதாகும். இதனை மா விரதம் என்றும் ஐவகை நோன்பென்றும் கூறுவர். உயிர் கொல்லாமை, வாய்மை, திருடாமை, ஆசையை துறத்தல், துறவு ஆகிய இக்கொள்கைகளை உற்று நோக்கின் அனைத்துமே அறத்தின் பாற்பட்டதென அறியலாம். இதனையே சீவக சிந்தாமணி,

**பொய்கொலை களவு காமம் அவா இருள்**
**புகாது போற்றிச்**
**செய் தவம் நுனித்த சீலம்**
**(சீவக சிந்தாமணி -2834)**

என்று குறிப்பிடுகிறது.

### பௌத்த அறக் கோட்பாடுகள்

பௌத்தத்தின் முக்கிய கொள்கை ஆசையை துறத்தல் என்பதாகும். எல்லாவிதமான துன்பங்களுக்கும் ஆசை ஒன்றே காரணம். பௌத்தமானது நான்கு வகையான வாய்மைகளை உடையது. அவை துக்கம், துக்க கரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண வழி என்பதாகும். பிறந்தர் வகள் அடைவது பெருந்துன்பம். பிறப்பை நீக்கியவர்கள் அடைவது பேரின்பம் பற்றினால் வருவது பெருந்துன்பம். பற்றை நீக்குவதால் வருவது பேரின்பமென மணிமேகலை கூறுகிறது. சமண சமயத்தை போலவே ஐவகை சீலத்தை உடையது பௌத்தமாகும். அவை

1. கொல்லாமை
2. கள்ளுண்ணாமை
3. திருடாமை
4. பிறன்மனை விரும்பாமை
5. பொய்யாமை

என்பதாகும். இத்தகு நெறிமுறையை பின்பற்றுவர். இன்பமடைவர் மற்றோர் துன்பத்தில் உழல்வர்

**மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்**
**(மணிமேகலை ஆதிரை பிச்சையிட்ட காதை 84)**

எனக் கூறுகிறது மணிமேகலை.

### கிறிஸ்த்தவ அறச் சிந்தனைகள்

கிறித்தவத்தை பொறுத்தவரை பத்து கட்டளைகளை அடிப்படையாக வைத்தே மதக் கொள்கை இயங்குகிறது. பத்து கட்டளைகளுள் அறச் சிந்தனைகள் அடங்கியுள்ளன. பொய் கூறக்கூடாது, களவு செய்தல் கூடாது. பெற்றோரை மதித்து நட. காமம் கொள்ளாதே போன்ற நல்லறக்

கருத்துகள் கூறப்படட்டுள்ளன. மேலும் பிறரை நேசிக்க வேண்டும். பிழை பொறுத்தல் வேண்டுமென்ற உயரிய பண்பை போதிக்கிறது.

> **"உன்னை போலவே உனக்கு அடுத் திருப்போரையும் நேசி"**
>
> ***(திருவிவிலியம்,மத்தேயு 22:36)***

என்ற வழி இதனை அறிய முடிகிறது. இயேசு கிறிஸ்துவின் வாழ்வியலோடு இடை இடையே நீதி கதை மூலமும் உவமை மூலமும் அறச் சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன.

## இஸ்லாமிய நெறி

இஸ்லாமிய மாடக்கத்தில் 5 வேளை தொழுகை எத்தகு முக்கியவதுவம் பெறுகிறதோ அதுபோலவே ஈகையும் முக்கியதுவம் பெறுகிறது. இஸ்லாமியத்தின் ஐவகை கோட்பாடுகளான

1. ஈமான்
2. தொழுகை
3. நோன்பு
4. ஜக்காத்
5. ஹஜ்

என்பவற்றுள் ஜக்காத் என்பது தான தருமங்களை குறிப்பதாக அமைகிறது. மேலும் பிற மத பழித்தலை எதிர்ப்பதை காண முடிகிறது.

> **அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகிறார்களோ அவற்றை பற்றி தீங்கு பேசாதீர்கள்**
>
> ***(குர்ஆன் 6:108)***

என்பதன் வழி மத ஒருமை எண்ணத்தை அறிய முடிகிறது

## முடிவுரை

மதங்கள் வெவ்வேறாய் இருப்பினும் மதங்களின் சாரம்சம் மக்களை அறநெறிப் படுத்தலாகும். வெறும் தெய்வ கோட் பாட்டளவில் நின்று விடாமல் மதங்கள் கூறும் அறவியலை நோக்கின் பொதுமைத் தன்மை விளங்கும்

## References


1. Dr. Thayammal aravaanan,Tamil samugaviyal oru Karuthadal (2002), International Institude of Tamil studies, Chennai, India
2. P. Kamalakkannan, Hindu Chiristian, Islam Unity (1999), Vaanathi Publication, Thyaga-raya Nagar, Chennai, India
3. The Holy Bible, (2002), The Bible Society of India, Bangalore
4. M. Abdul vahab (urai aasiriyar), Kuran, (2004) , slamath pathipakam, Chennai, India
5. P. Ramanatha pillai (urai aasiriyar), (2004), Thirumanthiram, kazhaka veliyidu, Chennai, India
6. A. Manikam (urai aasiriyar), (2007) Thiruku-ral, Thnedral Nilayam sithamparam, India
7. Durai Rasaaraam (urai aasiriyar), (2002), Seevaka sinthamani) Mullai nilaiyam, Chennai, India
8. Manimegalai, Pulioor kesikan (urai aasiriyar), (2002) Paari nilaiyam, Chennai, India